# இடைப் பருவத்திலும் இனிக்கும் வருமானம்! மகிழ்ச்சியான மாம்பழ சாகுபடி…



அகஸ்தீஸ்வரம் சிற்றூரிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் இருக்கிறது முகிலன் குடியிருப்பு. இந்தப் பகுதியீல், மா விவசாயத்திலும், வியாபாரத்திலும் தனக்கென தனி முத்திரையுடன் கொடி கட்டிப் பறந்து வருகிறார் பாலகிருஷ்ணன்.

கன்னியாகுமரி மாவட்ட சீதோஷண நிலைதான் எங்களுக்கு நல்லாவே கைகொடுக்குது. சீஸன்லயும் நல்லாவே காய்க்கிற மாங்காய், இந்த இடைப்பருவத்துலயும்கூட நல்ல விளைச்சல் கொடுக்குது. என்ன.. அதுக்காக கொஞ்சம் மெனக்கெட்டு உழவு, களைனு சில வேலைகளை பாத்துட்டா போதும். இடைப் பருவத்துல காய் வரத்து ரொம்பவும் குறைவுங்கறதால.. நல்ல விலை கிடைக்கும். எனக்குப் பதினஞ்சு ஏக்கர் நிலமிருக்கு. ரெண்டு ஏக்கர்ல நெல், மூணு ஏக்கர்ல தென்னை போக, மீதி பத்து ஏக்கர்ல மாமரங்கள்தான் நிக்குது. இதுபோக தனியார் நிலம், அரசு நிலம்னு ஒரு நூறு ஏக்கரை குத்தகைக்கு எடுத்து மா அறுவடை பண்ணிகிட்டிருக்கேன். நீலம், பெங்களூரா, பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், காலப்பாடு, ஜஹாங்கீர், சுவர்ணரேகா, சுந்தரி, பைரி ஏராளமான ரகங்கள் இருக்க. இதெல்லாமே இடைப்பருவத்திலும் நல்ல மகசூலைக் கொடுக்கும்.

மா சாகுபடிக்கு, மண்ணின் மேற்பரப்பில் செம்மண்ணும், அதிலிருந்து ஐந்து அடிக்கு கீழ் சரளை மண்ணும் (கிராவல்) இருந்தால் ரொம்பவும் நல்லது. வைகாசிப் பட்டம் உகந்தது. வரிசைக்கு வரிசை முப்பதடி, மரத்துக்கு மரம் முப்பதடி இடைவெளி இருக்குமாறு.. மூன்றடி சதுரம், மூன்றடி ஆழத்துக்கு குழி எடுக்க வேண்டும். ஏக்கருக்கு 45 குழிகள் வரும். இந்த அளவுக்கு இடைவெளி இருந்தால்தான் மாமரத்தின் காய்க்கும் காலம் அதிகமாக இருக்கும்.

குழிகளை பதினைந்து நாட்கள் ஆற விட வேண்டும். பிறகு, ஒவ்வொரு குழியிலும் தலா 50 கிலோ தொழுவுரத்தோடு, இரண்டு கைப்பிடி சுண்ணாம்புத் தூளை கலந்து இடவேண்டும்.

சுண்ணாம்புத்தூள் கலந்தால்தான் மாங்கன்றினை கரையான்கள், பூச்சிகள் அரிக்காது. சுண்ணாம்புக்கு பதிலாக பூச்சிக்கொல்லிகளையும் இடலாம். அதன்பிறகு, குழியின் நடுவில் கன்றை நடவு செய்து நீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தின் ஈரப்பதத்தைப் பொறுத்து நீர் பாய்ச்சினால் போதுமானது. மழைக் காலங்களில் நீர் பாய்ச்சத் தேவையில்லை. ஒட்டுரகக் கன்றுகளாக இருந்தால், அதில் சுற்றப்பட்டிருக்கும் துணி மண்ணில் படாமல் இருக்குமாறு நடவேண்டும். ஆறு மாத காலத்துக்கு அந்தத் துணி மண்ணில் அமிழ்ந்து விடாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் மண்பட்டால், கரையான் ஏறி செடியை அரித்து விடும். சொட்டுநீர் அமைப்பதாக இருந்தால் நடவுக்கு முன்பே அமைத்திட வேண்டும். (இவர் சொட்டுநீர் பாசனம் அமைத்திருக்கிறார்.)

செடிகள் வேர் பிடித்து வளரத் தொடங்கியவுடன், ஒவ்வொரு மரத்துக்கு அருகிலும் அரை அடிக்கு குழி எடுத்து, அதில் 100 கிலோ சாணி, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஷ், அரை கிலோ யூரியாவை வைத்து மூடி, பின் நீர் பாய்ச்ச வேண்டும். இந்த உரங்களை ஆண்டுக்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பருவம் முடிந்த பிறகும் இரண்டு உழவு போட்டு களைகள், புற்களை அகற்ற வேண்டும். இடைப்பருவத்தில் மகசூல் எடுக்க களைகளை அகற்ற வேண்டியது கட்டாயம். அப்போதுதான் அதிக மகசூல் எடுக்க முடியும். அதேப் போல மரங்களுக்கு அருகில் இருக்கும் புற்களையும் மண்வெட்டியால் அப்புறப்படுத்த வேண்டும்.

நான்காம் ஆண்டிலிருந்து மா காய்க்கத் தொடங்கும். வழக்கமான பருவம், இடைப்பருவம் இரண்டும் சேர்த்து நான்காம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு நான்கு டன்களுக்கு மேல் மகசூல் கிடைக்கும். அதற்கடுத்த ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடத் தொடங்கும். முறையாகப் பராமரித்து வந்தால், இரண்டு பருவங்களுக்கும் சேர்த்து ஏழாம் ஆண்டிலிருந்து பத்து முதல் பதினைந்து டன் வரை மகசூல் எடுக்கலாம்.

அக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிகமாக பனி அடித்தால், வெள்ளைப் பூச்சி தாக்குதல் இருக்கும். 'பூ' வில் வெண்ணை நிற மாவு போல படர்ந்திருந்தால் வெள்ளைப் பூச்சி தாக்கியிருக்கிறது என்ற அர்த்தம். இது தாக்கினால் பூக்கள் கருகி விடும். லிட்டர் நீரில், ஒரு தீப்பெட்டி மூடியளவு சல்ஃபர், 20 மில்லி மோனோகுரோட்டோபாஸ், 20 மில்லி வேப்பெண்ணெய் ஆகியவற்றைக் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இக்கலவை மூன்று மரங்களுக்குப் போதுமானதாக இருக்கும். 15 நாட்களுக்குள் சரியாகவில்லையென்றால் எண்டோசல்பான் அடிக்கலாம்.

முதல் மூன்ற ஆண்டுகளில் மரவள்ளி, முருங்கை உள்ளிட்ட ஊடுபயிர்களை சாகுபடி செய்து கூடுதல் வருமானத்தை எடுக்கலாம். அப்படிச் செய்யும் போது, ஊடுபயிர்களுக்கு இடப்படும் உரமே போதுமானது. மாமரங்களுக்காக தனி உரம் இட வேண்டியதில்லை. ஆனால், மூன்றாம் ஆண்டுக்குப் பிறகு, கண்டிப்பாக ஊடுபயிரைத் தவிர்த்திட வேண்டும். அப்போதுதான் மாவில் நல்ல மகசூல் எடுக்க முடியும். ஆண்டுக்கொரு தடவை உரம், இரண்டு தடவை உழவு, தேவைப்பட்டால் பூச்சிக்கொல்லி இதைச் சரியாகக் கடைபிடித்து வந்தால் போதும். இரண்டு பருவங்களிலும் நல்ல மகசூலை எடுக்கலாம்.

என் தோட்டத்துக்கு மரங்களுக்கு 25 வயசு ஆச்சு. முக்கியப் பருவத்தில ஏக்கருக்கு 10 டன் மகசூலும், இடைப்பருவத்தில் 5 டன் மகசூலும், இடைப்பருவத்தில் 5 டன் மகசூலும் கிடைக்குது. இடைப்பருவத்தில் தேவையும், அதிகம் இருக்கறதால நாமளே விலை நிர்ணயம் செய்ய முடியும். முக்கியப் பருவத்தில கிலோ 10 ரூபாய்க்கு குறைவில்லாமலும், இடைப்பருவத்தில 60 ரூபாய் வரையும் விக்கும். நான் மாம்பழங்களை நேரடியா பாம்பே, டெல்லினு வியாபாரிகளுக்கு அனுப்புறதால கூடுதல் லாபம் கிடைக்குது என்றார் உற்சாகமாக.

ஒரு ஏக்கர் மா சாகுபடியில் பாலகிருஷ்ணன் சொல்லும் செலவு – வரவு கணக்கு

| **விபரம்** | **செலவு** | **வரவு** |
|---|---|---|
| 45 கன்றுகள் | 900 | |
| நடவு | 3,000 | |
| நீர்பாய்ச்ச | 4,000 | |
| உரம் | 16,000 | |
| உழவு | 8,000 | |
| களை | 4,000 | |
| பறிப்பு | 10,000 | |
| 3 டன் மாங்காய் மூலம் வரவு | | 75,000 |
| மொத்தம் | 47,900 | 75,000 |
| நிகர லாபம் | | 27,100 |

**தொடர்புக்கு:**

பாலகிருஷ்ணன் 94436-07690

ரிச்சர்ட்கென்னடி 04651 - 281191